# விளம்பரம் ™

VLAMBARAM ™

416-282-8059 416-282-4978

சமூக முன்னேற்றப் பத்திரிகை மாதமிருமுறை இலவசம்



வீடு விற்க,வாங்க...

Raja M. Mahendran, P. Eng.

(Sales Rep.)



இன்றைய சேவையே நாளைய வெற்றி!

Office: 416.491.4002

Pager: 416.589.4270



நதி 13 MARCH 15, 2003 பாலம் 06


## வெளிவந்துவிட்டது உலக தமிழோசை 4வது இதழ்




### மீண்ட வாழ்வு

அந்த ஒரு நாள் எவருக்கும் வரக்கூடாது. ஆனால் எனக்கு வந்துவிட்டது; உயிர் போகும் நிலையில் இருந்த வாழ்வும் மீட்கப்பட்டு விட்டது. ஆனால் அந்த நினைவு மாத்திரம் என் இருதயத்தில் இருந்து மீட்கப்படவில்லை. அந்த மறக்க முடியாத அனுபவத்தை மீட்டுப் பார்ப்போம் என்று பேனையை எடுத்தேன்.

இன்று

அப்போது ஆயிரத்துத் தொளாயிரத்து தொண்ணூறாம் ஆண்டு. திகதி தான் மறந்து போயிற்று. தை மாதம் என்பது மனத்தில் பதிந்துவிட்ட ஒன்று ....

## ரொறன்ரோவில் நடைபெற்ற முதல் தமிழ் குறும்திரைப்பட விழா ஒரு கண்ணோட்டம்

கனவுத் தொழிற்சாலை, திரைப்படத் துறையின் இன்னுமொரு பெயர். அந்தத் தொழிற்சாலையில் பணிபுரிய பலருக்குப் பல கனவுகள் இருந்தும் பணம், மற்றும் அதற்கு தேவையான தொழில்நுட்ப திறமைகள் இல்லாமை போன்ற காரணங்களினால் அந்தப் பக்கம் போவதற்கு பலரும் பயப்படு வார்கள்.

சென்ற பெப்ரவரி மாதம் 15ஆம் திகதி Scarborough, Civic Centre அரங்கில் சுதந்திர, கலை, கலாசார வலையம் ஒழுங்கு செய்திருந்த தமிழ் குறுந்திரைப்பட விழா, கனவுத் தொழிற்சாலைக்கு ஒரு வழிகாட்டியாக அமைந்து இருந்தது. பல இலட்சம் ரூபாய்களோ (டொலர்) தொழில்நுட்ப வல்லமையோ இல்லாதவர்கள் கூட தமது மனதில் உதிக்கும் எண்ணங்களை சாதாரண வீடியோ கமராக்கள் வழியாக இரண்டு, மூன்று நிமிடங்களில் கவித்துவமாக திரைகளில் சொல்லிவிடலாம் என்ற மனத் தைரியத்தை மனித மனங்களில் வளர்த்துவிட்டது எனலாம்.

குறும்திரைப்பட விழா இரண்டு பகுதிகளாக, குறும் திரைப்படங்கள், விவரண சித்தரங்களை திரையிடுதல் என்றும், மூன்றாவது பகுதியாக அங்கு பார்வையாளர்களாக வந்து இருந்தவர்கள் கலந்து கொண்ட கலந்துரையாடலாகவும் அமைந்து இருந்தது.

மதியம் 12 மணிமுதல் பிற்பகல் 2 மணி இடைவேளை வரை திரையிடப்பட்டவைகளில் தமிழ் நாட்டில் குறும் திரைப்பட தயாரிப்புக்களில் முழு மூச்சாக ஈடுபட்டு இருக்கும் அருண்மொழி, அருள் எழிலன் போன்றவர்களின் படைப்புக்கள் திரையிடப்பட்டன. சில குறும்படங்களும், விவரண சித்திரங்களும் ஒரு நிமிடம் முதல் ஆறு, ஏழு, பத்து, இருபத்தைந்து நிமிடங்கள் என்று தயாரிக்கப்பட்டு இருந்தமையால் பல தயாரிப்பில் ஈடுபட்டு இருந்த அனைவரது பெயர் விபரங்களையும் உடனுக்கு உடன் மனத்தில் பதிய வைப்பது இலகுவான காரியமாக இருக்கவில்லை. முழுமையான விபரங்களை தேமதுரம்.com என்ற இணையத்தில் அறிந்து கொள்ளக் கூடியதாக இருக்கும். திரையிடப்பட்ட 15இற்கும் மேற்பட்ட தயாரிப்புக்கள் பற்றிய விபரங்கள் அனைத்தையும் இங்கே தருவது கடினம். அவற்றைப் பற்றிய முழு விபரங்களையும் சுதந்திர கலை கலா-சாரவலையம் அல்லது தேமதுரம்.com உடன் தொடர்பு கொண்டு அறிந்து கொள்ளலாம்.

பிற்பகல் 2 மணிக்கு பின்னரே திரைப்பட விழாவிற்கு அதிக எண்ணிக்கையில் மக்கள் வருகை தந்து இருந்தனர். அதனை மனதில் கொண்டு போலும் சுதந்திர கலை கலாசார வலையத்தினர் மூன்று கனடிய தயாரிப்புக்கள் முதலாக சிங்கப்பூரில் மற்றும் தமிழ்நாட்டில் தயாரிக்கப்பட்ட நல்ல கதை சமூக கற்பனைத் திறனும் கொண்ட படைப்புக்களைத் திரையிட ஒழுங்கு செய்து இருந்தனர். இடைவேளையின் பின் பிற்பகல் 2:30 மணிக்கு முன்னாள் யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர் திரு. இராஜேந்திரம் அவர்கள் விழாவை ஆரம்பித்து வைத்தனர. தொடர்ச்சி - பக்கம் 13


வசந்தா நகை மாளிகை



தொழிற்சாலை

Since 1987

வசந்தன், பத்மநாதன் பத்தர்களின் கைவேலைப்பாடு

Tel: 905-848-5151

Fax:905-848-8502

10:00AM-8:30PM

திங்கள் மூடப்படும்

3025 HURONTARIO ST.
UNIT 103A
MISSISSAUGA, ON
L5A 2H1 CANADA

Singapore Communication

UNLIMITED TALKING*

only $40.00 / m

• 350 Mins Daytime Free
• Evenings & Weekends Free

$30.00 / M

• 100 Mins Daytime Free
• Evenings & Weekends Free
• V/M, C/D*, C/C & C/W FREE
• Lunch Hour (12-1pm)

HURRY ALL PROMOTION ENDS THIS MONTH

OFFICE: 416-740-5292

5010 Steeles Ave. W., Unit 17ABC - (Kipling & Steeles)

துரித பணமாற்றுச் சேவை

வவுனியா -கொழும்புச் சுற்றுப் புறங்களுக்கும் - சிங்கப்பூர் - சென்னை ஆகிய இடங்களுக்கும் கடுகதியில் பணம் அனுப்புவதற்கு

மு. காசிப்பிள்ளை & சன்ஸ்

416.267.8221



சந்திரமௌலீஸ்வர சிவாலயம்

வெள்ளி, சனி, ஞாயிறு மற்றும் விசேட தினங்களில் காலை 7am - மாலை 9pm வரை திறந்திருக்கும். தினமும் ஆறுகால பூஜைகள் நடைபெறும்.

ஆலயம் திறந்திருக்கும் நேரங்கள்

திங்கள் - வியாழன்
காலை 7am - 2pm,
மாலை 5pm - 9pm

விசேட தினங்களில் பூஜை நேரங்களில் மாற்றங்கள் ஏற்படலாம். ஆலயத்தை அழைத்து பூஜை நேரங்களை நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள்

Tel: 416 - 754 - 7338 / 416 -724 -7480


3011 Markham Road , Unit 62 & 63 (North of Mcnicoll Ave.), Scarboro., ON.



Insurance & Financial Services

Balan Kanapathi (Agent)

• Auto
• Home
• R.R.S.P
• Life
• Disability
• Mutual Fund
• Group Insurance
• Child Education
• Travel & Business



416.321.1515 • 905.294.2429

4433 Sheppard Ave. E. Suit 200, (Brimley/Sheppard)

FAMILY MEDICAL CENTRE

DR. D. KURUNATHAN

(MBBS, MD, CCFP)

Female Family Physician



Tel: 416.293.7700

880 Ellesmere Rd., #201, Scarborough, ON HOPPER HUT இற்கு அருகாமையில்

# செய்யும் தொழிலில், வெற்றி பெற



சென்றவாரத் தொடர்ச்சி

இந்த உலகில் ஒவ்வொரு கட்டத்திலும் பாலும், நீரும் கலந்தே இருக்கும். அன்னப் பறவையைப் போன்று பாலை மட்டும் பிரித்துக் கையாளும் போது உங்கள் வெற்றி கூடுகின்றது. அரிசியும், உமியும் கலந்தே இருக்கும். உமியை ஊதி, அரிசியைப் பயன்படுத்த வேண்டும். நல்லது கெட்டதைப் பிரித்துணரும் சக்தியும், ஒவ்வொன்றின் விளைவுகளை முன் கூட்டியே அறிந்திருப்பதும் வெற்றிக்கான வழிகளாகும்.

உங்களுக்குப் பழக்கமில்லாததில் காலத்தைச் செலவிட்டு வருமானத்தை இழக்காதீர். ஒரு நல்ல வியாபாரி கடையில் இருந்தால் ஒரு நாளைக்கு நூறு டொலர் இலாபம் சம்பாதிப்பார் எனக் கொள்வோம். அந்த வியாபாரிக்குக் கணக்கு எழுத வராது. அப்படியானால் அவர் என்ன செய்ய வேண்டும்? தானே கணக்கியல் படித்து கணக்கு எழுத வேண்டுமா? இல்லை ஒரு கண்கரை ஒப்பந்த அடிப்படையில் வேலைக்கு அமர்த்த வேண்டுமா? யோசியுங்கள். மறுபடியும் அந்த வியாபாரியையே எடுத்துக் கொள்வோம். கடையில் நிமிர முடியாத அளவுக்கு வேலை; வாடிக்கையாளர் கூட்டம் அலைமோதுகின்றது. அவர் வீட்டுக்குப் பெயிண்ட் அடிக்க வேண்டும். அவருக்கோ பெயிண்ட் அடிப்பதில் பெரிய திறமை கிடையாது. கணக்கு எழுதத் தெரியாது என்பதும், பெயிண்ட் அடிக்கத் தெரியாது என்பதும், அந்த வியாபாரியின் பலவீனங்கள். கடையில் காட்டும் வியாபாரத் திறமை அவருடைய பலம்.. அப்படியானால் அந்த வியாபாரி செய்ய வேண்டியதெல்லாம் இது தான்: "பலத்தை விற்க வேண்டும்; பலவீனத்தை வாங்க வேண்டும்" யோசியுங்கள் மாற்றிச் செய்தால், அனர்த்தம் விளையும்.

தோல்விகளை ஒரு போதும் உங்கள் தனிப்பட்ட தோல்வியாகக் கருதாதீர். தொழிலில் வெற்றி கண்டு முன்னேறிய பலர் சராசரியாக மூன்று தொழில்களில் தோல்வி கண்ட பின்னரே வெற்றியடைந்ததாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன. இந்தப் பொதுவிதிக்கு உட்படாது எடுத்த எடுப்பிலேயே வெற்றி பெற்றவர்களும் இல்லாமல் இல்லை. ஆனால் இரு சாராரிலுமே பொதுவாகக் காணப்படும் வெற்றிக்கான இரண்டு காரணங்கள்.

* கற்பனை, ஆக்க பூர்வமான கற்பனை
* உற்சாகம், தோல்விகளுக்கு மத்தியிலும் தளராத உற்சாகம்.

ஒருவன் ஓட முயன்றான். ஆனால் தடுமாறி கீழே விழுந்து விட்டான். இது தோல்வியா? இல்லவே இல்லை. அவன் எழுந்திருக்க முயலவில்லை என்றால்தான் உண்மையான தோல்வி ஆரம்பமாகின்றது.

## பெரி. முத்துராமன்

இதேபோல வியாபாரத்தில் தோல்வியைத் தவிர்க்க வேண்டும் என்றால் ஒரே ஒரு வழிதான் இருக்கின்றது. அது வியாபாரம் செய்யாமல் இருப்பதே. வியாபாரத்தில் பொருள்களை விற்பதற்கென யாரிடமும் ஏதும் கேளாதீர்; சந்திக்க நேரத்தை (appointment) கேளாதீர். வாடிக்கையாளருக்கு எப்படி உதவ முடியும் என்று கேளாதீர்? இப்படி நீங்கள் ஒன்றையும் கேட்கவில்லை என்றால் தோல்வி இராது. ஆனால் தொழிலும் இராது; பணமும் வராது.

"ஆமாம்" என்ற பதிலை ஒரு வாடிக்கையாளரிடமிருந்து பெறுமுன் சராசரியாக பதினைந்து "வேண்டாம்" என்ற எதிர்மறைப் பதிலைப் பெற வேண்டியிருக்கும் என்று ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

"வேண்டாம்" அல்லது "இல்லை" என்ற பதிலை உங்கள் மேல் எழுதப்பட்ட தீர்ப்பாகக் கருதக் கூடாது. அதற்கு எத்தனையோ காரணங்கள் இருக்கலாம். அவை உங்களைச் சார்ந்ததாகவும் இருக்கலாம்; உங்களுக்கு அப்பாற்பட்டதாகவும் இருக்கலாம். வெற்றிக்கான உங்கள் கற்பனையில், உங்களை நீங்கள் மாற்றிக் கொள்ள வேண்டும் என்று தெரிந்தால் மாற்றிக் கொள்ளுங்கள்; மற்றப்படி கவலைப்பட அதில் ஒன்றும் இல்லை. உற்சாகத்துடன் அடுத்த வாடிக்கையாளரைச் சந்திக்கப் புறப்படுங்கள். பிறகென்ன வெற்றி ஏணியில் படிப்படியாக ஏறுவது நிச்சயம். தொடரும்....

திரு. பெரி. முத்துராமன் MBA, M.Com பட்டம் பெற்றவர். இந்தியாவிலும், கனடாவிலும் சிறுதொழில் வளர்ச்சியோடு தம்மைச் சம்பந்தப்படுத்திக் கொண்டவர். இவருடைய கட்டுரைகள் இந்தியாவில் Financial Express, Economic Times, Hindu business time மற்றும் ரொறன்ரோவில் வெளிவரும் பத்திரிகைகளிலும், சஞ்சிகைகளிலும் இவருடைய கட்டுரைகள் வெளிவந்து கொண்டிருக்கின்றன. தம்முடைய அனுபவத்தையும், அறிவையும் mentoring business நிறுவனத்தின் வாயிலாக வேண்டுவோர்க்கு வழங்குகிறார். இவருடன் தொடர்பு கொள்ள

Tel: 416-335-3381 e-mail: mentoringbusiness@yahoo.ca

YARLCAN
STEAM CLEANING




உங்கள்
சகலவிதமான
Cleaning
தேவைகளுக்கும்
அழையுங்கள்-

* DUCT CLEANING
* CARPET CLEANING

மோகன்: (905) 887-7436 ஸிலல: (416) 721-9709


NTE AUTO
New Trade Engineering Inc.



ஸ்காபரோவில் 12வது வருட தன்னிகரற்ற சேவை

உங்கள் சகலவிதமான ஐரோப்பிய, ஜப்பானிய, அமெரிக்க வாகனத் திருத்த வேலைகளுக்கு நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம்.

Also Air Condition Service & Repair



SIVABALAN
416.750.1573


என். ரி. இ. ஓட்டோ இங்க்

151 NATUCKET BLVD., UNIT #12, SCARBO., ON

IN NEW MILLENNIUM WE ARE ENTERING 11TH YEAR SERVICE IN SCARBOROUGH

INCOME TAX

* Incorporation
* Business Set-up & Registration
* Accounting & Bookkeeping
* Payroll, G.S.T. & P.S.T.
* Incomes Taxes (Free E-File)
* CCRA Audit and Appeals



Tarsem Parmar

FINANCIAL SERVICES



* Mortgages
upto 1.5% below the bank posted rates
* Lines of Credit
* Business Loans
* Personal Loans

PERMANENT RESIDENT CARDS

Free Applications filled for Seniors for PR Cards
Special Discounted rates to Taxi/Truck Operators, Serving the community since 1992

Scarborough & Markham Area
416-937-1563
2 Irenemount Cres., Markham
(Markham Rd./Steeles Ave.)

Brampton
416-937-1563
8 Strathearn Ave., Unit 1
(Dixie/Steeles)

# APPLEMORE AUTOMOTIVE

உட்புற, வெளிப்பு திருத்த பராமரிப்பு வேலைகளுக்கு என்றும் உங்கள் மத்தியில்

ONTARIO'S DRIVE CLEAN
Accredited Test & Repair Facility

* Detailing
* Motor Shampoo
* Interior Shampoo
* Exterior Wash
* Waxing
* Repairs
* Safety Certification
* Overall Maintenance
* Under Coating
* Rust Proofing

**416-285-4998**
435 Midwest Road. Unit B5,
Scarborough, ON. M1P 3A6

SPECIAL



# இலங்கை வர்த்தக ஒன்றியம் - கனடா

## மொத்தவியாபாரம் Vs சில்லறை வியாபாரம்



Colombo Photo

கடந்த பெப்ரவரி 25, 2003ஆம் திகதி டெல்ரா ஹொட்டலில் கனடாவில் தொழில்புரியும் மொத்தவியாபாரிகளும் சில்லறை வியாபாரி களும், ஊடகவியலாளர்களும் கலந்து கொண்டார்கள்.

திரு. குகதாசன் (Ceycan trades) அவர்களின் தலைமையில் மாலை 7 மணியளவில் வைபவம் ஆரம்பித்தது. தொடர்ந்து பேசிய திரு. தேவகுமார் (நிரு என்ரபிறைஸ்) இந்த 'இலங்கை வர்த்தக ஒன்றியம்' ஏற்படுத்த வேண்டிய காரணங்களை மிகத் தெளிவாக வெளிப் படுத்தினார். அதன் முக்கியத்துவத்தையும் விளங்கப்படுத்தியுள்ளார். தமது உரையில், இப்படி ஒரு ஒன்றியம் உருவாக்குவதால்



சில்லறை வியாபாரிகள் எவ்வாறு தமது தொழிலில் வளம் பெறமுடியும் என்பதை யூத இனத்தின் உதாரணம் மூலம் தெரியப் படுத்தினார்.

மார்க்கம் & எல்ஸ்மெயர் பகுதி நோவா ஸ்கோசியா வங்கி முகாமையாளர் திரு. மனோ தில்லைநாதன் சிறப்பு விருந்தினராக் கலந்து கொண்டு சொற்பொழிவாற்றினார். வங்கியில் கடன் பெறுவது எப்படி என்பதனைப் பற்றி தனது உரையில் விளக்கினார்.

இதனைத் தொடர்ந்து கனடாவில் 5 வருடத்திற்கு மேலாக வியாபாரத்தில் சிறப்பாகத் தொழில் நிறுவனத்தை நடாத்தி வருபவர்களைப் பெருமைப்படுத்தும் விருதுகள் வழங்கி கௌரவிக்கப்பட்டன. இவ் விருதுகளை திரு. மனோ தில்லைநாதன் வழங்கினார். பரிசு வழங்கலைத் தொடர்ந்து சபையில் இருப்பவர்களின் கருத்துக்கள் கேட்கப்பட்டது. முதலாவதாக சங்கானைச் சந்தை பரா அவர்கள் தனது கருத்தை தெரிவிக்கும் போது, எமது மக்களுடன் வியாபாரங்களைச் செய்வதால் எமக்கு நாமே உதவி செய்கின்றோம் எனக்



கூறினார். தொடர்ந்து யோகாஸ் சுப்ப மார்க்கட் உரிமையாளர் தவம் பேசிய போது கனடாவில் வசித்துவரும் 250,000 மேற்பட்ட தமிழ் மக்களின் வளர்ச்சிக்கு இந்த நாடு உதவி செய்ததை நாம் மறக்கக் கூடாது. அதற்கு எம்மால் செய்யக் கூடிய உதவிகளை செய்ய வேண்டும் எனவும் மேலும் சங்கங்களின் தலைமைகள் தமது எண்ணங்களை நிறைவேற்றுவதை தவிர்த்து எல்லோரின் கருத்துக்களையும் கேட்டும் செயல்படுத்த வேண்டும் எனவும் கூறினர்.

தொடர்ந்து கருத்தைத் தெரிவித்த சங்கர் இன்ர நெசனல் உரிமையாளர் சிறி, இப்படியொரு நிறுவனத்தை உருவாக்க 15 வருடங்கள் எடுத்தது என்பதனை வெளிப்படுத்தி இந் நிகழ்வை நடத்தியதற்கு நன்றியைத் தெரிவித்தார்.

திரு. குமார் அவர்கள் சங்கத்தின் சார்பாக நன்றியை தெரிவித்தார். இராப்போசன விருந்துடன் இந்நிகழ்ச்சி இனிதே நிறைவு பெற்றது.


**ஞானம்ஸ் ஸ்ரூடியோ**
Introducing 1 Hour Photo Lab: 3x5 & 8 x 12
Professional Photographer - கதிர்
416 - 750 - 8118
2381 Eglinton Ave., E., Kennedy / Eglinton, Scarborough




வீடு, அறை, BASEMENT வாடகை / விற்பனை விளம்பரங்களை ஐந்து நாட்களுக்கு முன்பாகத் தரவும்.



**AVIS. RENT A CAR**


Main & Danforth
2575 Danforth Avenue
Tel: 416 691 3113

1345 Lawrence Ave E
(Victoria Park & Lawrence)
Tel: 416 441 1818

4352 Kingston Road
(Kingston & Lawrence)
Tel: 416 724 2847

1910 Yonge Street
(Yonge & Davisville)
Tel: 416 932 2847

AVIS
We try harder.
avis.com



# அன்புத் தமிழ்

சென்ற இதழின் தொடர்ச்சி....

போர்க்களத்து நிகழ்ச்சி களைக் கண் ணெதிரே காட்டுகின்றது பின்வரும் வெண்பா:

*உடைதலையும் மூளையும் ஊன்தடியும் என்பும்*
*குடருங் கொழுங்குருதி ஈர்ப்ப-மிடைபேய்*
*பெருநடஞ்செய் பெற்றித்தே கொற்றப்போர்க் கிள்ளி*
*கருநடரைச் சீறும் களம். (-முத்தொள்ளாயிரம்)*

தலைகள் உடைகின்றன. மூளைகள் சிதறுகின்றன. ஊனும் தசையும் பிளவு படுகின்றன, எலும்புகள் முறிகின்றன. குடல்கள் கிழிபடுகின்றன. இரத்தம் பீறிடுகின்றது. பேய்கள் கூத்தாடுகின்றன. மேலுள்ள வல்லிசை வண்ணப் பாடலைச் சற்றே உரத்துப் படிக்கின் சோழன் கருநாடக மன்னனை வென்ற போர்களத்து நிலைமை முற்றும் வெளிப்படுவதைக் காணலாம்.

கண்ணப்ப நாயனார் வேட்டையாடும் வேகத்தைக் காட்டுகின்றது பின்வரும் பாடல்:

*தாளறுவன இடைதுணிவன தலைதுமிவன கலைமான்*
*வாளிகளொடு குடல்சொரிதர மறிவனசில மரைமா*
*நீளுடல்விடு சரமுருவிட நிமிர்வனமிடை கடமா*
*மீளிகொள்கணை படுமுடலெழ விழ்வனபல உழையே.*
*(-பெரியபுராணம்)*

இவ்விதம் கருத்துக்களையும் உணர்ச்சி களையும் செயல் வேகங்களையும் சிறப்புற வெளிப்படுத்தச் செய்யுளோசை பயன்படு கின்றது. அது சொல்லவரும் பொருளுக்கு அமைய வேறுபடும் தன்மையது. பொருத்தமான ஓசைகளை தெரிந்தெடுப பதற்குப் புலவருக்குப் பூரண சுதந்திரம் உண்டெனினும் சொல்வளமும் சுவை உணர்வும் உள்ளவரே ஓசைகளை நயமுறக் கையாள வல்லவர்.

ஓசை ஒருவகை மொழி. சக்தி வாய்ந்த மொழி. அதனைக் கவிதையிலிருந்து பிரித்தல் என்பது கவிதையின் கழுத்தை நெரிந்தலுக்குச் சரியானது. ஓசை யுடைமையை நூல் அழகுகளில் ஒன்றாக வைத்தனர் நம் முன்னோர். கல்வி செவிவழி இருந்த காலத்தில் செய்யுளுக்கு ஓசை தேவையாக இருந்தது.

## கவிஞர் வி. கந்தவனம்

இப்பொழுது அந்த நிலை இல்லாதலால் ஓசையும் வேண்டிய தில்லை என்ற கருத்தைச் சிலர் முன் வைக்கின்றனர்.

கவிதை பொதுமக்கள் கருவியாதல் வேண்டுமெனின் ஓசையுடையதாக இருத்தல் வேண்டும் என்பது என் கருத்து. ஓசை இன்பம் மக்களுக்கு அன்றும் இன்றும் என்றும் உவப்பான தொன்று. நாட்டுப் பாடல்களிலும் பழமொழிகளிலும் ஓசை நயம் மிகுந்திருப்பதற்குக் காரணம் மக்களின் ஓசை உணர்வேயாகும். இந்த உண்மையை நன்கு அறிந்தவர்கள் திராவிட முன்னேற்றக் கழக அறிஞர்கள். அவர்கள் தமது எழுத்துக்களிலும் பேச்சுக்களிலும் எதுகை மோனைகளைக் கலந்து மக்களைக் கவர்ந்த கதை. கவர்ந்து வரும் கதை கண்முன் நடைபெறுவதொன்று. இந் நிலையில் கவிதைக்கு ஓசை வேண்டாம் எதுகை மோனை வேண்டாம் என்பது கவிதையை மக்களிடமிருந்து வேறுபடுத்த விழையுமொரு விழல் முயற்சியாகும்.


15 வருடங்களாக தமிழர் மத்தியில் நன்மதிப்பைப் பெற்ற

# யோகாஸ்

## குறுக்கு எழுத்துப் போட்டி இல. 140

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | | 2 | | | | 3 | 4 |
| | | | | | | | 5 |
| | | | | | | | |
| 7 | | | | | 8 | | |
| | | | | | | | |
| | 9 | | | 10 | 11 | | |
| | | | | | | | |
| 12 | | 13 | | | | | 14 |

**இடமிருந்து - வலம்**
1. வாங்கின விலை
4. பாய் (வல - இட)
5. எழுது (வல - இட
6. உடை
7. மேன்மக்கள்
9. இலையான்
10. பாக்கு மரம்
12. கொள்கை
14. நட்பாயிரு (வல - இட

**மேலிருந்து - கீழ்**
1. கணவன்
2. தோய்
3. அலை
4. பூமி
6. ஆதி (கீழ் - மேல்)
8. பாண்டங்கள் வைக்கும் தூக்கு (கீழ் - மேல்)
10. அந்தம் (கீழ் - மேல்)
11. மேளம்
12. வரி (கீழ் - மேல்)
13. நோக்கு (கீழ் - மேல்)
14. வியாழன் (கீழ் - மேல்)

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| நு | ரை | யீ | ர | ல் | | தி | ப |
| ணு | | | | நி | | | ச் |
| க் | | மு | தொ | | வா | ஞ் | சை |
| க | தி | | ட | | க் | | |
| ம் | க | க் | ர் | த | கு | | க |
| | ழ் | | | | வா | யி | ல் |
| று | | சி | பா | | த | | லூ |
| நூ | ல் | நி | லை | ய | ம் | | ரி |

சரியான விடைகளில் இருவர் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்படுவர். இவர்களுக்கு "யோகாஸ்" இல் பாவிக்கக் கூடிய $15, $10 Gift Certificates வழங்கப்படும். இதற்கு cash value கிடையாது. விடைகள் March 25, 2003க்கு முன்னர் விளம்பரம் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

**139இல் வெற்றி பெற்றோர்**
1) E. Pathmarani, Scarborough
2) B. Niruban, Toronto

* ஆட்டிறைச்சி வியாபாரத்தில் தமிழ் மக்களின் உள்ளங்களை வென்றவர்!
*அன்றாட சந்தையில் மரக்கறி, மீன் வகைகளை தினமும் தருவித்துக் கொடுப்பவர்கள்.
*வாடிக்கையாளர்களின் தொகையில் உயர்ந்தவர்!

(416) 267-0408 **731 - 733 kennedy Road [Ken-Mark Plaza]**



# வாகன விபத்தில் காயமடைந்துவிட்டீர்களா?

UNITED
PERSONAL INJURY ASSOCIATES
*The Car Accident People*
ஒன்ராறியோவின் மிகப்பெரிய ஸ்தாபனம்

**கனடாவில் 30 வருடத்திற்கும் மேலான அனுபவம்**

**உங்களுக்குத் தெரியுமா?**
நடந்த விபத்து உங்கள் தவறில்லாவிடின் உங்களால் **$172,000.00** வரை இழப்பீடாகப் பெறமுடியும். அத்துடன் இதனால் ஏற்படும் வலி, வருத்தம், வேலை இழப்புப் பணம், வாழ்வில் இழந்த மகிழ்ச்சி மற்றும் பல்வகையான இழப்புக்களுக்கு நஷ்டஈடாகப் பல்லாயிரம் டொலர்கள் வரையில் பெறமுடியும்.

**விபத்து உங்கள் தவறானாலும் கூட**
உங்களால் **$ 172,000.00** டொலர் வரையும் வருமான இழப்பீடாக வாரத்திற்கு **$400.00** வரையும் இன்னும் பலவகை இழப்பீடுகளையும் பெறமுடியும்.

உடல்ரீதியாகவோ அல்லது உளரீதியாகவோ பாதிக்கப்பட்டிருப்பின் இன்றே அழையுங்கள்
**யுனைட்டெட்**

*பண இழப்பீட்டுத் தீர்வு மற்றும் காப்புறுதி நிறுவனத்திற்கு எதிராக வழக்குத் தொடர்வதில் உங்களுக்குள்ள உரிமைகளை அறிய உடன் தொடர்பு கொள்ளவும்*

**அனுபவசாலியின் ஆலோசனை பெற்றபின் உங்கள் முடிவை எடுங்கள்**

வீட்டுப்பெண்ணா அல்லது குழந்தை பராமரிப்பவரா? வேலை செய்கிறீர்களா அல்லது வேலையில்லையா? பள்ளி மாணவரா? எவராயிருப்பினும் உங்களால் நஷ்டஈடு பெறமுடியும். நீங்கள் சாரதியாக இருந்தாலும் பாதசாரியாக இருந்தாலும் பேரூந்தில் பயணிப்பவரானாலும் சைக்கிளில் செல்பவரானாலும் இன்னும் தவறு உங்களுடையதாக இருப்பினும் கூட உங்களால் நஷ்டஈடு பெறமுடியும்.

**உங்கள் அறியாமையால் வாரத்திற்கு**
**$1000.00**
**வரை இழப்பதற்கு அனுமதியாதீர்கள்**


**பிழையான அனுபவமில்லாத ஆலோசனைகளுக்குள் விழுந்து விடாதீர்கள்**

தமிழ் உட்பட 25ற்கும் அதிகமான மொழிகளில் சேவை வழங்கப்படுகிறது

*இலவச ஆலோசனைகளுக்கும் தமிழில் தொடர்புகளுக்கும் இன்றே அழையுங்கள்*

**தீபன் - (416) 505-9804**

- 5255 Yonge Street, Suite 200, North York
- 257 Dundas Street E., Unit 1, Mississauga
- 29 King Street E., Unit 7, Kitchener
- 507-251 Bank Street, Ottawa
- 195 Main Street E., 1st Floor, Hamilton
- 75 Collier St., Unit A, Barrie

உங்கள் பிள்ளைகளின் **EQAO** பரீட்சை பற்றிக் கவலைப்படுகிறீர்களா?

**மாகாணப் பரீட்சையில் அதிஉயர் சித்திபெற்றோர் படித்ததும்**

**ஆரம்பம் முதல் சாதனை மாணவர்களை உருவாக்கியதும்**

# வீ வீ ரியூரறிங் சென்ரர்



**M.Mathura** Gr.3
*Level 4 in All*



**S.Abira** Gr.3
*Level 4 in All*

தற்பொழுது பின்வரும் இடங்களில் வகுப்புக்கள் நடைபெறுகின்றன.


- **Bellamy Campus** (1095 Bellamy Rd. Miracle Family Temple L.Level)
- **Kennedy Campus** (2390 Eglinton Ave. East, #204)
- **Markham Campus** (28 James Edward Drive, Markham)
- **Mississagua Campus** (1808 Drew Rd, Sri Jey Durga Temple Hall)

சனிக்கிழமை வகுப்புக்கள் Bellamy, Mississagua ஆகிய இடங்களில் **March 15, 2003** இலிருந்து ஆரம்பமாகின்றன.

மாதிரிப் பரீட்சை வகுப்புக்கள் **March 29, 2003** இலிருந்து ஆரம்பமாகின்றன.

**Gr.2 and Below Oral Reading Classes By Canadian Teachers.**

**All Subjects To All Grades By a Panel of Experienced Teachers including Canadian Teachers.**



**K.Harieshan** Gr.6
*Level 4 in Math & Reading*
*Others 3*



**J.Dalscene** Gr.6
*Level 4 in Math*
*Others 3*

Mathematics Contest Classes தற்பொழுது நடைபெறுகின்றன.

பதிவுகளுக்கும் தொடர்புகளுக்கும்

# VV TUTORING CENTRE

**416-701 1763 OR 905 471 3084**

**எங்கள் சேவை உயர்ந்தது! கட்டணம் குறைந்தது!!**


**எங்கள் மாணவர் முணணியில்!!!**




**M.N. Nivethiga** Gr.3
*Level 4 in Writing*
*Others 3*



**S.Abirtha** Gr.3
*Level 4 in Math*
*Others 3*




Model Test




Gr.6 Exam Seminar



English Reading Class



Gr.3 Exam Seminar



Gr.3 Exam Seminar




# நாமும் நமது இல்லமும் 161

வீடு விற்பனையில் இந்த வருடத்தில் பெரிய மாற்றம் ஏற்பட்டதாகத் தெரியவில்லை. விலை தொடர்ந்து அதிகரித்து வருவதாகவே காணப்படுகின்றது. மார்ச் மாதத்தில் கனடிய வங்கியின் வட்டிவீதம் 1/4வீதத்தால் அதிகரிக்கப்பட்டது. 2.75% ஆக இருந்த கனடிய மத்திய வங்கியின் வட்டி வீதம் 3% ஆக அதிகரித்தது. இந்த வட்டி அதிகரிப்பால் நிதி நிறுவனங்கள் தமது முதன்மை வட்டி வீதத்தையும் 4.5% இலிருந்து 1/4%ஆல் அதிகரித்தது. இப்பொழுதுள்ள முதன்மை வட்டி வீதம் 4.75% ஆகக் காணப்படுகின்றது. ஆனால் நீண்டகால வட்டி வீதத்தில் எதுவித அதிகரிப்பும் காணப்படவில்லை. இதற்கு மாறாக கனடாவில் மிகப்பெரிய வங்கியாகிய றோயல் வங்கி தனது 4 வருடத்திற்குரிய மோட்கேஜ் வட்டி வீதத்தை 4.64% ஆகக் குறைத்துள்ளது.

இப்பொழுது எல்லோர் மனதிலும் ஏற்படும் கேள்வி, ஈராக்கில் எப்பொழுது போர் ஏற்படும்? இதனால் வீட்டு விலையில் பாரிய சரிவு ஏற்படுமா? வட்டி வீதம் அதிகரிக்குமா? பங்குச் சந்தையில் மேலதிக இறக்கம் நேரிடுமா? வேலைகளில் மேலும் அதிக பற்றாக்குறை ஏற்பட்டு, வேலை செய்யாதவர்களின் எண்ணிக்கை அதிகரிக்குமா?

விற்கப்பட்ட வீடுகள் (Toronto Realesate Board)




போர் ஏற்படுவதற்கான அரசியில் காரணங்கள் அதிகமாகவே காணப்படுகின்றன. இதுவரை நடந்த போர்களை அவதானிக்கும் போது, இந்தப் போர் குறுகிய காலமாக இருந்தால், மேலே எழுப்பப்பட்ட பாதிப்புகள் குறைவாகவே காணப்படும். ஆனால் போர் நீண்டு கொண்டு போனால் பெரிய பாதிப்புகள் ஏற்படுவதை தவிர்க்க முடியாமல்தான் போகும்.

அனேகமான அரசியல் ஆய்வாளர்களின் கருத்துப்படி இந்தப் போரிற்கு எதிராக வேறு

## ராஜா மகேந்திரன்

நாடுகள் தலையிடாமல் இருந்தால், ஏற்படப் போகும் போர், மிகக் குறுகிய காலத்தில் முடிந்து விடலாம் எனக் கூறுகிறார்கள்.
ரொறன்ரோ பெரும் பாகத்தில் வளர்ந்து வரும் பெரிய நகரங்களில் ஒன்று மிசிசாகா. கனடாவின் ஆறாவது பெரிய நகரம் இதுவாகும். கடனாவில் முதல் 500 பெரிய வியாபார நிலையங்களில் 42 வியாபார நிலையங்கள் தமது தலைமைக் காரியாலயங்களை (Head Office) இங்கே வைத்திருக்கின்றன.

மேலும் 22,000 வியாபாரங்கள் இங்கே இயங்குகின்றன. இதில் 386,000 மக்கள் தொழில் புரிகின்றார்கள். இதனால் இங்கு கடந்த சில வருடங்களில் அதிகமான வீடுகள் கட்டப்படு கின்றன. விலையிலும் ஏற்றம் காணப்படுகின்றது. மிசிசாக நகரின் பூகோள அமைப்பு சகலவித போக்குவரத்திற்கும் இலகுவாக் காணப்படு கின்றது. இந்த நகரித்தின் வளர்ச்சிக்கு Mayor Hazel McCallion பங்கை எவரும் மறுக்க முடியாது.

**மிசிசாக பற்றிய சில தகவல்கள்**

| | |
|---|---|
| மக்கள் தொகை: | 650,000 |
| நிலத்தின் அளவு: | 28,750 hectares |
| வியாபார நிறுவனங்கள்: | 22,000 |
| Retail வியாபாரங்கள்: | 11,000 |
| தொழில்புரிபவர்கள்: | 386,000 |
| பெருந்தெருக்கள்: | 401,403,407,410,427,409 & QEW |
| வருடாந்த வளர்ச்சி: | 3.5% |

### CONDO FOR SALE



- Neilson & Sheppard
- 2 Bedroom
- 2 Washroom
- Corner Unit
- Good Layout
- 1 Car parking
- Asking only $135,000.00

### HOUSE FOR SALE


- 3 Level Backsplit • Semi detached house
- Morningside & Sheppard
- 4 Bedroom + Den • 2 Living room
- Asking only $209,900.00

### FREE HOLD TOWN HOUSE SALE



- Neilson & Sheppard
- 3 Bedroom
- 3 Washroom
- Single attached garage
- Basement apartment possible
- Asking $217,000.00

### HOUSE FOR SALE



- Markham & Sheppard
- 4 Bedroom detached house
- 3 Car parking
- 3 Washroom
- Walkout basement
- 1 Bedroom BSMT apt. with kitchen
- Asking $254,900.00

Raja M. Mahendran P.Eng.
T.P: Office- 416-491-4002
Pager - 416-589-4270

| Interest | Rate |
|---|---|
| 5YrsMortgage | 5.20% |
| Prime rate | 4.75% |
| Bank rate | 3.00% |

## EDUCATION FUND SERVICES Inc.

*The Children's Education Trust of Canada*

குழந்தைகளின் கல்விக்கான நம்பிக்கை நிதியம்



Siva Kanapathypillai
(Divisional Director)

உங்கள் பிள்ளைகள், பேரப்பிள்ளைகளின் கல்வியை ஊக்குவிக்கும் கனடா அரசாங்கத்தின் நன்கொடையை(20% Grant) பெற இன்றே நாடுங்கள்.

- டொலர் 10இல் இருந்து இத்திட்டத்தில் சேரலாம்!
- உங்கள் சேமிப்புக்கு உத்தரவாதம்!
- கல்வியை ஒருவராலும் களவாட முடியாது!

சிறந்த சேவையையும், இலவச ஆலோசனைகளையும் பெறத் தொடர்பு கொள்ளுங்கள்:

**416-438-0660 / 416-438-3578 Cell: 416-899-6044**
**Fax: 416-438-8532 Res: 905-472-1139**
**1200 Markham /Rd., Suite #301, Scarb., Ont.**

**முழுநேர, பகுதிநேர வேலை வாய்ப்புக்கள் உண்டு.**

## யோகா சோதிடம்



- கிரகப் பொருத்தம் பார்த்தல்
- சுபமுகூர்த்தம் கணித்தல்
- சாதகக் குறிப்புக் கணித்தல்
- பலன் பார்த்தல்

**416-299-8361**

## MORTGAGES

*Five Years closing mortgage rates (அடமானம்) 5.20% on $100,000.00 per month installment comes out $601.11. For different time period closing rates are given below*



*Mortgage Rates (மோட்கேஜ் வட்டி வீதம்)*

| Period | Rate of interest |
|---|---|
| 6 month | 4.55% |
| 1 Year | 3.90% |
| 2 Year | 4.50% |
| 3 Year | 4.65% |
| 4 Year | 4.85% |
| 5 Year | 5.25% |
| 7 Year | 5.90% |
| 10 Year | 6.15% |

Variable Prime rate 0.65% and Prime rate 4.50%
Some conditions may apply



**For more information call:**
**Anil Joshi at**
**416.888.1072**

# முத்தி நல்கும் காசி இராமேசுவரம்

**சென்றவாரத் தொடர்ச்சி**

இராமேஸ்வரத் திருக்கோயிலில் 5-02-2001ஆம் திகதி மகா கும்பாபிசேகம் மிகச் சிறப்பாக நடைபெற்றுள்ளது. அன்று இலட்சக்கணக்கான பக்தர் கள் பங்கு கொண்டமை குறிப்பிடத்தக்கது. அவ்வேளையில் திருமாலின் வாகனமாகிய கருடன் பறவை நான்கு இத்திருக் கோயிலை சுற்றி சுற்றி வலம் வந்தமையால், விண்ணவர் களும் மகாகும்பாபிசேகத்தைப் போற்றி வழிபட்ட செயலைக் காணலாம். எனவே விண்ணவர்களும், மண் ணவர்களும் போற்றி வணங்கும் புனித தலமாக இராமேஸ்வரத் திருக்கோயில் விளங்குவதைக் காணலாம்.

இராமலிங்கம்

இராமேசுவரத் திருக்கோயில் உள்ள கிழக்கு கோபுரம் மேற்கு கோபுரத்தை விட உயரமானது. கிழக்கு இராசகோபுரம் ஏழு தங்க கலசங்களைக் கொண்டுள்ளது. மேற்கு கோபுரம் ஐந்து கலசங்களைக் கொண்டுள்ளது. திருக்கோயில் உள்ள சுற்றுப் பிரகார வீதிகள் மிக நீளமானதாகும். இப்பிரகார வீதியில் நுட்பமான சிற்ப வேலைப்பாடுகளைக் கண்டு மகிழலாம். மூன்றாம் பிரகார வீதியில் உள்ள தத்துருபமான சிற்ப வேலைப்பாடுகளை மேனாட்டு சிற்பக் கலைஞர்கள் கண்டு வியந்துள்ளார்கள். இதனால் இத் திருக்கோயில் உலக வரலாற்றில் புகழ் பெற்றுள்ளது. இத் திருக்கோயில் உள்ள சிற்ப வேலைப்பாடுகளில் கோயிலின் வரலாற்று செய்திகளும், திருப்பணி செய்த மன்னர்களின் மகிமையையும் கண்டு இன்பம் பெறலாம். மேலும் இராமர், சீதை, அனுமான், இலட்சுமணன், அகத்தியர், விபிடணன் போன்றவர்களின் உருவச் சிலைகள் தத்துருபமாக அமைந்துள்ளன. இத் திருக்கோயிலில் உள்ள பெரிய நந்தி பார்ப்போர் உள்ளங்களில் வியப்பை உண்டாகுவதைக் காணலாம். இதனை அமைத்த சிற்பி ஒரே வடிவத்தில் நந்தியையும் அனுமானையும் காட்டும் திறன் க்றபனைக்கு அப்பால்பட்ட ஒன்றாக விளங்குவதைக் காணலாம். இத்தகைய அற்புதமான சிற்ப வேலைப்பாடுகளை நோக்கும் பொழுது சிற்பக் கலைஞர்கள் மிக்க

**அ. சிவானந்தநாதன்**

இறைபக்தியோடு இதனை செய்தமையைக் காணலாம். எனவே மகாசிவராத்திரி தினத்தில் இத்தகை இறைவனின் சிறப்பினைக் காட்டும் சிற்ப வேலைப்பாடுகளைப் பார்ப்பதினால், இராமேசுவரப் பெருமானின் ஒப்பற்ற மகிமையை நன்கு தெளியலாம். இதனால் பக்தர்களின் உள்ளத்தில் உயர்ந்த பக்தியை மேன்மேலும் நிலை பெறச் செய்வதைக் காணலாம். உண்மையில் இத்தலத்தை தரிசிப்பதினால் பக்தர்களின் உள்ளத்தில் உயர்ந்த பக்தி நிலை பெறுவதைக் காணலாம்.


சிவராத்திரி நாளில் இராமேசுவரத்தை தரிசித்தால் கோடி புண்ணியமாகும். 'கோயில் தரிசனம் கோடி புண்ணியம்' என்பது முன்னோர் வாக்காகும். இதற்கு அமைய சிறந்த சிவதலமாக விளங்குவது இராமேசுவரத் திருக்கோயில் ஆகும். எம்பெருமானின் அருளால் எல்லாச் செல்வமும் எளிதில் பெறலாம். இத் தலம் ஈழநாட்டில் உள்ள திருக்கேதீச்சுவரத்தையும் திருக்கோணேச் சரத்தையும் இணைப்பதைக் காணலாம். இவ் இரு திருக்கோயில்களும் பாடல் பெற்ற தலங்களாகும். இதில் திருக்கேதீஸ்சரத் திருக் கோயிலை இராமேசுவரத் திருக்கோயிலோடு இணைத்துப் பாடியுள்ளார் சுந்தரமூர்த்தி சுவாமிகள். "ஈழநாட்டு மாதோட்டந் தென்னாட் டிராமேச்சரம்" என்று வரும் அடிகள் தேவாரத்தில் இடம்பெற்றுள்ளன. நாயன்மார்களின் தரிசனம் செய்த இராமேசுவரத் திருக்கோயிலை நாமும் தேடிச் சென்று சிவராத்திரி தினத்தில் வழிபாடு செய்தால் அவன் அருள் எப் பிறவியிலும் துணை நின்று அருள் புரியும். சிறப்பாக சேதுபதி மன்னர்களின் திருப்பணியினால் இத் திருக்கோயில் பெரும் புகழ் பெற்றுள்ளது. இம் மன்னரின் குலதெய்வம் இதுவேயாகும். வேதாகம நூல்களை முறையாகக் கற்ற மராத்திய வேதியர்கள் இத் திருக்கோயிலில் சிறப்பான பூசைகளை ஆகம விதிப்படி செய்வதைக் காணலாம். மேலும் இக் கோயிலில் பூசை செய்யும் சிவாச்சாரியார்கள் பக்தர்களிடம் இதன் மகிமை எடுத்து ஓதுவதில் மிக்க விரும்பம் உடையவர்கள். இதனால் பக்தர்கள் இத் திருக்கோயிலை பலமுறை தரிசித்து இன்பம் பெறுவதைக் காணலாம். இத் திருக்கோயில் மிகச் சிறப்பாக நடைபெறும் மாசி மாத சிவராத்திரியை ஒருமுறை கண்டு வழிபாடு செய்தால் மீண்டும் அத் தரிசனத்தைப் பெறவேண்டும் என்ற ஆவல் உள்ளத்தில் நிலைபெறுவது நிச்சயம்.


**வானத்தில் பறப்பது நீங்கள்**
**வசதிகள் செய்து தருவது நாங்கள்**

FLYAIR TRAVEL INC.

நகரில் மிகக்குறைந்த விலையில் விமானப் பயணச் சீட்டுகளைப் பெற்றுக்கொள்ள அழையுங்கள்

Tel: 416-285-9900
Fax:416-285-9800
e-mail: flyair@bellnet.ca









# விளையாட்டுத் தகவல்கள் - 119
# உலக கோப்பை - 2003 கிரிக்கெட்

## பலிக்குமா ஸ்ரீலங்காவின் கனவு?

பலம் பொருந்திய நியூசிலாந்து, மேற்கு இந்திய தீவுகள், தென் ஆபிரிக்கா அணிகளை வென்ற ஸ்ரீலங்கா அணி கென்யாவிடம் பெற்ற தோல்வியினாலும், இந்தியாவிடம் பெற்ற தோல்வியினாலும் பெரும் இக்கட்டான நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது. Group A சம்பியனாக அவுஸ்திரேலியாவும் Group B சம்பியனாக ஸ்ரீலங்காவும் Super Six இற்கு நுழைந்தன. அதனால் இரசிகர்களிடையே பெரும் எதிர்பார்ப்பை ஸ்ரீலங்கா அணி ஏற்படுத்தியது!

ஸ்ரீலங்கா அணி துடுப்பாட்டத்தில் நம்பிக்கையில்லாத ஒரு நிலையிலேயே காணப் படுகின்றது. சனத்ஜெயசூரியா, அத்தபத்து, அரவிந்த போன்றோரைத் தவிர ஏனைய துடுப்பாட்ட வீரர்கள் தமது பங்களிப்பை வழங்கத் தவறுகின்றனர். மகேலா ஜெயவர்த்தனா 5 இனிங்சிலும் பெற்ற மொத்த ஓட்டங்கள் 16 மட்டுமே என்பது குறிப்பிடத்தக்கது. களத்தடுப்பை நோக்குவோமானல் எதிரணி வீரர்களுக்கு ஓட்டங்களை வாரி வழங்குவதிலும் அவர்களின் பிடிகளை நழுவ விடுவதிலும் முன்னணியில் ஸ்ரீலங்கா வீரர்கள் திகழ்கின்றனர். எதிரணி வீரர்கள் ஆட்டமிழக்க நினைத்தாலும் அவர்களை ஆட்டமிழக்கச் செய்யாமல் களத்திலேயே வைத்துக் கொள்ளும் நல்ல மனது விக்கெட் காப்பாளர் குமார் சங்ககாரவை தவிர யாருக்கும் இல்லை! முரளி, வாஸ் அவர்களின் சிறப்பான பந்துவீச்சுகளை மட்டும் நம்பியே ஸ்ரீலங்காஅணி களமாடுகின்றது. இந்த பலவீனங்களை பலமாக ஸ்ரீலங்கா அணி மாற்றுமா என்பதும், ஸ்ரீலங்காவின் கனவு பலிக்குமா என்பதும் சந்தேகமே? பொறுத்திருந்து பார்ப்போம்.

### அணிகளின் தலைவிதிகளை மாற்றும் 'மழை விதி'

தென்னாபிரிக்கா - இலங்கை அணிகள் மோதிய உலக கிண்ணக் கிரிக்கெட் போட்டி மழையால் பாதிக்கப்பட்டதும் சர்வதேச அளவில் டக் வெர்த்-லுயிஸ் விதி பற்றிய பரபரப்பான விவாதம் தொடங்கி இருக்கிறது. மழையால் ஆட்டம் பாதிக்கப்படும் போது போட்டியின் முடிவை அறிய சரியான ஒரு விதி இல்லாமையால் சர்வதேச கிரிக்கெட் சபை அவதிப்பட்டது. அந்த நேரத்தில் கணிதமேதைகளான பிராங் டக் வெர்த் மற்றும் ரோனி லுயிஸ் ஆகியோர் புதிய விதி ஒன்றைக் கண்டுபிடித்தனர். முதன் முறையாக கடந்த 97ஆம் ஆண்டு சர்வதேச கிரிக்கெட்டில் இந்த விதிகள் பரிசோதிக்கப்பட்டன. பின்னர் டக் வெர்த்-லுயிஸ் விதிக்கு சர்வதேச கிரிக்கெட் சபையில் முறையான அங்கீகாரம் கொடுக்கப்பட்டது.

உதாரணமாக விவாதத்தைக் கிளப்பி உள்ள தென்னாபிரிக்க-இலங்கை மோதலை எடுத்துக் கொள்வோம். இலங்கை அணி 50 ஓவர்களில் 268 ஓட்டங்களைப் பெற்றது. பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணி 45 ஓவர்களில் 6 விக்கெட்டுகளை இழந்து 229 ஓட்டங்களைப் பெற்றது. மேற்கொண்டு போட்டி நடக்க முடியாமல் மழை குறுக்கிட்டதால் டக்வெர்த்-லுயிஸ் விதிப்படி போட்டியின் முடிவை எவ்வாறு காண்பது என்பதைக் குறித்து தெளிவாகப் பார்ப்போம்.

முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணிக்கு 100 சதவீத ஆட்டம் கிடைத்தது. ஆனால் தென்னாபிரிக்காவுக்கு டக்வெர்த்-லுயிஸ் விதிப்படி 14 சதவீத ஆட்டம் எஞ்சி இருந்தது.

அதாவது 86 சதவீத ஆட்டம் மட்டும்தான் தென்னாபிரிக்காவுக்கு சாத்தியப்பட்டது. இதன்படி 86 சதவீத ஆட்டத்தில் இலங்கை அணிக்கு கிடைத்த ஓட்டம் என்னவாக இருக்கும் என்பதை கணக்கிட வேண்டும்.

இலங்கை அணி பெற்ற ஓட்டத்தை 86 சதவீத ஆட்டத்துக்கு கணக்கிட வேண்டும் அதில் கிடைப்பது 230.48 ஓட்டங்களாகும். புள்ளியை ஒதுக்கிவிட்டால் 230 ஓட்டங்கள் வரும்.

ஆட்டம் நிறுத்தப்பட்ட போது எதிர் அணி 230 ஓட்டங்களைப் பெற்றால் அந்த அணி வெற்றி பெற்றதாய் அறிவிக்கப்படும். பதிலுக்கு துடுப்பெடுத்தாடும் அணி இந்த எண்ணிக்கையை எட்டவில்லையானால் தோல்வி அடைந்ததாக அறிவிக்கப்படும். தென்னாபிரிக்காவின் நிலையில் இங்குதான் குழப்பம் உண்டானது.

ஆட்டம் நிறுத்தப்பட்ட போது தென்னாபிரிக்கா 229 ஓட்டங்களை மட்டுமே பெற்றமையால் இந்த மோதல் சமநிலையில் முடிவடைந்ததாக நடுவர்கள் அறிவித்தனர். தற்போது நடைமுறையில் இருக்கும் விதியை விட தரமான இன்னொரு விதிமுறை கண்டு பிடிக்கப்படும் வரை கிரிக்கெட்டின் தலைவிதியை மாற்றப்போவது டக்வெர்த்-லுயிஸ் விதிகள் தான் அதற்குள் தென்னாபிரிக்கா போல் இன்னும் எத்தனை அணிகள் டக்வெர்த்-லுயஸின் விதிக்குப் பலிக்கடாவாகப் போகிறதோ தெரியவில்லை.

**சாதனைகள் படைத்த சச்சின், கங்குலி இணை**
நமீபியாவுக்கு எதிரான ஆட்டத்தில் இந்தியாவின் சச்சின் டெண்டுல்கர், கங்குலி இணைந்து 2வது விக்கெட்டுக்கு 244 ஓட்டங்கள் சேர்த்தனர்.

ஒரு தின ஆட்டங்களில் எந்தவொரு விக்கெட்டு க்கும் 8வது அதிகபட்சம் இது. 2வது விக்கெட்டுக்கு 2வது அதிகபட்சம். ஒரு தின ஆட்டங்களில் கூட்டாக அதிக பட்ச ஓட்டங்கள் குவித்த ஜோடிகளில் முதல் 8இல் 6இல் இந்தியர்களும், 2இல் பாகிஸ்தானி யர்களும் இடம்பெற்றுள்ளனர்.



உலகக் கோப்பைகளில் எந்தவொரு விக்கெட்டுக்கும் அதிகபட்ச ஓட்டக் குவிப்பில் 2வது இடத்தைப் பிடித்துள்ளது கங்குலி, சச்சின் இணை. 1999 மே 26இல் டவுண்டனில் நடைபெற்ற ஆட்டத்தில் இலங்கைக்கு எதிராக கங்குலி, ராவிட் இணைந்து 318 ஓட்டங்கள் விளாசியதே உலகக் கோப்பைகளில் அதிக பட்சமாக இன்றும் உள்ளது.

**எஸ். கணேஷ்**

**10 நாடுகளுக்கு எதிராக சதங்கள்:** நமீபியாவுக்கு எதிராக சதம் விளாசியதன் மூலம் ஒரு தின ஆட்டங்களில் 10 நாடுகளுக்கு எதிராக சதம் எடுத்த முதல் வீரர் என்ற பெருமையைப் பெற்றார். இதே ஆட்டத்தில் சதம் அடித்த கங்குலியும் 10 நாடுகளுக்கு எதிராகச் சதம் விளாசியுள்ளார். அவுஸ்திரேலியாவின் மார்க் வாஹ், தென்னாபிரிக்காவின் ஹெர்ஷல் கிப்ஸ் ஆகியோர் 9 நாடுகளுக்கு எதிராகச் சதம் அடித்துள்ளனர்.

**ஒரே ஆட்டத்தில் 2 சதங்கள் - 3வது முறை:** கங்குலி, சச்சின் சதம் எடுத்ததன் மூலம் உலகக் கோப்பைகளில் ஒரே ஆட்டத்தில் 3வது முறையாக 2 இந்திய வீரர்கள் சதம் எடுத்துள்ளனர். 1999இல் கென்யாவுக்கு எதிராக பிரிஸ்டலிலும் (சச்சின் 101 பந்துகளில் 140 நொட் அவுட் (not out), திராவிட் 109 பந்துகளில் 104 நொட் அவுட்), 1999இல் இலங்கைக்கு எதிராக டவுண்டனிலும் (கங்குலி 158 பந்துகளில் 183, ராவிட் 129 பந்துகளில் 145) இதே சாதனையை இந்திய வீரர்கள் புரிந்தனர்.

ஒரே ஆட்டத்தில் 2 வீரர்கள் சதம் எடுத்த சாதனையை மேற்கிந்தியத் தீவுகளின் வீரர்களும் ஒரு முறை புரிந்துள்ளனர். 1987இல் கராச்சியில் இலங்கைக்கு எதிராக விவியன் ரிச்சர்ட்ஸ் (125 பந்துகளில் 181), டெஸ்மான்ட் ஹேய்ன்ஸ் (109 பந்துகளில் 105) சதம் விளாசினர்.

**யுவராஜ் சிங்கின் சிறப்பு:** நமீபியாவுக்கு எதிராக யுவராஜ் சிங் 4.3 ஓவர்களில் 6 ஓட்டங்கள் கொடுத்து 4 விக்கெட்டுகளைச் சாய்த்தார். ஒரு தின ஆட்டங்களில் யுவராஜை விட குறைவான ஓட்டங்கள் கொடுத்து விக்கெட்டுகளை வீழ்த்திய பெருமையை மேற்கிந்தியத் தீவுகள் வீரர்களே பெற்றுள்ளனர். கர்ட்னி வால்ஷ் (1 ஓட்டத்துக்கு 5 விக்-4.3 ஓவர், இலங்கைக்கு எதிராக ஷார்ஜாவில், 3-12-86), ஃபில் சிம்மன்ஸ் (3 ஓட்டங்களுக்கு 4 விக். 10 ஓவர், பாகிஸ்தானுக்கு எதிராக, சிட்னியில், 17-12-92) (ஆகியோர் இச்சாதனையைப் புரிந்துள்ளனர்) இந்தியாவின் சுனில் ஜோஷி, 1999 செப்.26இல் நைரோபியில் தென்ஆப்பிரிக்காவுக்கு எதிராக 10 ஓவர்களில் 6 ஓட்டங்கள் கொடுத்து 5 விக்கெட்டுகளை வீழ்த்தியுள்ளதும் குறிப்பிடத்தக்கது. தொடரும்

**Super Six table**

| | P | W | L | T | NR | R/R | Pts |
|---|---|---|---|---|---|---|---|
| Australia | 4 | 4 | 0 | 0 | 0 | 1.79 | 20 |
| India | 4 | 3 | 1 | 0 | 0 | 0.86 | 16 |
| Kenya | 4 | 3 | 1 | 0 | 0 | 1.03 | 14 |
| New Zealand | 4 | 1 | 3 | 0 | 0 | -0.88 | 8 |
| Sri Lanka | 4 | 1 | 3 | 0 | 0 | -1.43 | 7.5 |
| Zimbabwe | 4 | 0 | 4 | 0 | 0 | -1.20 | 3.5 |


J.A.B. TRAVELS & TOURS

Top Sales Award for Cathy pacific

ஆசிய - ஐரோப்பா - அவுஸ்ரேலியா - வடமத்திய - தென்அமெரிக்க - உலகின் சகல பாகங்களிற்குமான ரிக்கற் வசதிகளுக்கு நாடவேண்டிய இடம்

J.A.B TRAVELS & TOURS.

1185 DUNDAS ST. E., # 203 MISSISSAUGA ON

(905) 896-8320



தொழில் புரிய முடியாத நேரத்தில் உதவுபவர் - யார்?



* $1000 வருமானவரி அற்ற மாத வருமானம். (2 வருடங்கள் வரை)
* 65 வயது வரை நன்மை (benefit) பெறலாம்.
* 24 மணிநேர பாதுகாப்பு.
* மருத்துவப் பரிசோதனை தேவை இல்லை.
* உடனடிக் கொடுப்பனவு (No waiting period)
* $100,000 வரையான ஒரு கட்டக் கொடுப்பனவு.

* சில நிபந்தனைகளுடன்

$53.20 /mth

மேலும் எங்களிடம் பெறக் கூடிய சேவைகள்

- Life insurance
- Critical illness insurance
- Mortgage insurance
- Health and Dental Benefits
- Registered Education Savings Plan (RESP)
- Investments and savings plan
- RRSP loan

இவை பற்றிய பூரண ஆலோசனைகளைப் பெற

Ken Teh - 416.803.6096

kenteh@sympatico.ca

புதிய முகவரியில் விசாலமான இடத்தில் சகல வசதிகளுடனும்......

# கொழும்பு போட்டோ ஸ்ருடியோ

**Division of A1 St - Francis Ltd.**

# DIGITAL PHOTO STUDIO

"Professional Photo & Videography
All Types of Video & Photographics Work"

*WEDDING,*
*BIRTHDAY,*
*ARANKETTAM,*
*BABY PHOTO,*
*FAMILY PORTRAIT,*
*PASSPORT, CITIZEN,*
*PUBERTY CEREMONY,*
*P.R CARD, ID PHOTO*
*ECT.........*

**9 ஆவது ஆண்டை**
**முன்னிட்டு 5 x 7 to 12 x 18 இற்கான**
**Digital Enlargement அரை விலைக்கு**
**March 15 முதல் April 15 வரை**
**செய்து கொடுக்கப்படும்**

"அனைத்து போட்டோ வீடியோ படப்பிடிப்புக்கள்
எல்லா வகையான போட்டோ வீடியோ வேலைகள்"
திருமணம்
பிறந்த நாள்
அரங்கேற்றம்
குடும்பப் படம்
குழந்தைப் படம்
பாஸ்போட், சிற்றிசன்
பூப்புனித நீராட்டு விழா
லாண்டட் போட்டோ ஐ டி
இன்னும் பல, பல.........

**FREE FREE FREE**

**2 - 5 x 7 Studio Portrait
Enlargement Free
(Couple or Family)
With Purchase of any
Passport, Citizen,
P. R Card, ID Photo
(Picture Value $20)**

**இலவசம் இலவசம் இலவசம்**

பாஸ்போர்ட், சிற்றிசன்,
லாண்ட்ட போட்டோ ஐ டி
படம் எடுக்க வரும் ஜோடிகள்,
குடும்பத்தினருக்கு இரண்டு **5 x 7**
ஸ்ருடியோ போட்டோ இலவசம்
(அதன் பெறுமதி **$20.00**)

## Album Sale



**Digital Professional Enlargement
From Negative**

| Photo Size | Reg. Price | Sale Price |
|---|---|---|
| 5 x 7 | $5.00 | $2.50 |
| 6 x 9 | $6.00 | $3.00 |
| 8 x 10 | $10.00 | $5.00 |
| 8 x 12 | $10.00 | $5.00 |
| 10 x 15 | $20.00 | $10.00 |
| 11 x 14 | $20.00 | $10.00 |
| 12 x 18 | $25.00 | $12.00 |

**Digital Professional Enlargement
From CD, Floppy, SD Midea
Memory Stick &Compact Flash**

| Photo Size | Reg. Price | Sale Price |
|---|---|---|
| 5 x 7 | $6.00 | $3.00 |
| 6 x 9 | $8.00 | $4.00 |
| 8 x 10 | $12.00 | $6.00 |
| 8 x 12 | $12.00 | $6.00 |
| 10 x 15 | $25.00 | $12.00 |
| 11 x 14 | $25.00 | $12.00 |
| 12 x 18 | $30.00 | $15.00 |


**DIGITAL VIDEO TRANSFER
ANY TO ANY SYSTEM PAL, NTSC,SECAM
FROM VIDEO CASSETTE TO VCD TO DVD**

U S Leather Album
35 Pages (10 x 10)
**$600.00**
(Reg. Price $700.00)

Italy Leather Album
EN5924 - 20Pages (16 x 16)
**$1150.00**
(Reg. Price $1250.00)

CDN Leather Album
35 Pages (10 x10)
**$450.00**
(Reg. Price $550.00)

**Digital Special Effect From $25.00**




# A1 ST. FRANCIS LTD

## CEDARFACE PLAZA

**2296 Eglinton Ave. East**

**Unit #6, Lower Level (Basement)**

**Birchmount & Eglinton**

காஞ்சி சில்க் - பிரியா கொன்வினியன்ஸ்
41 Divison Police நிலையத்திற்கு
அருகில் உள்ள பிளாசாவில்

# 416 752 4444





# ஆரோக்கிய வாழ்வு

**N. செல்வசோதி**

நீங்கள் விரும்பும் குழந்தையைப் பெறலாம்

**குழந்தை வேண்டும்**

மனம் முதலில் ஒன்று வேண்டும் என நினைக்கும். அது கிடைக்கும் போல இருந்தால் தாம் விரும்புகிறதைப் போல கிடைக்க வேண்டும் என எண்ணும். இது வாழ்க்கை. இதன்படி ஒரு குழந்தை வேண்டும் என்று மனிதர் ஆசைப்படுவர். திருமணமாகி மனைவி கருவுற்றவுடன் ஆண்பிள்ளை பிறக்க வேண்டுமே என்ற கவலை இருவருக்கும் வந்துவிடும்.

**ஓடிபஸ் கொள்கை**

தாய் - பெண் என்பதால் ஆண்குழந்தை மீதும், தகப்பன் ஆண் என்பதால் பெண் குழந்தை மீதும் ஆசை வைக்கின்றனர். இது ஓடிபஸ் கொள்கை எனப்படும். யாருக்குமே மாற்றுப் பாலினத்தின் மேல்தான் விருப்பம் உண்டாகும். ஆணும், பெண்ணுமாகக் குழந்தைகளைப் பெற்ற பெற்றோர்களைக் கவனித்துப் பாருங்கள்.

தந்தை அதிகமாகப் பெண்மீதே பிரியம் வைத்திருப்பார். தாய்க்கு ஆண்பிள்ளை மீதே ஆசை அதிகமாயிருக்கும். இது சிறுவயதில் மட்டுமன்றி வளர்ந்த நிலையிலும் நீடிக்கும்.

**ஆண் என்றால் கவலையில்லை**

ஒரு பெண்ணுக்கு இன்னும் உலகில் சுதந்திரமாகத் திரியும் நிலை உருவாகவில்லை. துணை தேவைப்படுகிறது; இரவுகளில் குடும்பத்தை விட்டு தனியே தங்க அனுமதி யில்லை இயற்கையாகவே அவர்களுக்கு அச்சத்துடன் கூடிய மனோபாவம் உருவாகி விடுகிறது.

ஆண் என்றால் கவலையில்லை. எங்கும் விடலாம் எப்படியும் வளர்க்கலாம். காவலும் வேண்டாம் எனவே ஆண் ஒன்று பிறந்தால் அடுத்து பெண் பிறக்க வேண்டுமென்று ஆசைதான்.

**விரும்பும் பிள்ளை பேறுக்கு**

பிள்ளைப்பேற்றை விரும்பும் மனைவி தீட்டுக் குறித்து ஐந்து நாட்கள் சென்று ஆறாவது நாள் கூடலாம் என்கின்றனர். ஒற்றை எண் வரும் நாட்களில் கூடினால் ஆணும், இரட்டை எண் வரும் நாட்களில் சேர்ந்தால் பெண்ணும் பிறக்கும் என்கிறது வாசி யோகம். வாசி என்றால் காற்று என்று பொருள்.

மூச்சானது இரண்டு மூக்கினாலும் சமகாலத்தில் நடைபெறுவதில்லை. ஒரு குறிப்பிட்ட காலத்தில் இடது மூக்கிலும் சில காலவரையறையில் வலது மூக்கிலும் ஓடுகின்றது. வலது மூக்கில் சுவாசம் நடைபெறும் போது மனைவியுடன் சேர்ந்தால் ஆணும், இடது மூக்கில் மூச்சு ஓட்டம் நடைபெறும் போது கூடினால் பெண்ணும் பிறக்கும் என்கிறது சித்தர்களின் தத்துவமும் திருமூலரின் திருமந்திரமும்.

திங்கள், புதன், வெள்ளிக்கிழமைகளில் படுக்கையிலிருந்து எழுந்தவுடன் கவனியுங்கள்; மூச்சு இடது மூக்கு வழியாக வந்து கொண்டிருக்கும். அன்று முழுவதும் இடது மூக்கில் தான் மூச்சு நடக்கும். ஆகவே அந்த கிழமைகளில் மனைவி குறித்து ஆறு, எட்டு, பத்து நாட்களாயிருக்கும் போது கூடினால் நிச்சயமாக பெண் குழந்தையே பிறக்கும்.

இதே போல் செவ்வாய், சனி, ஞாயிறு கிழமைகளில் மனைவி குறித்து ஏழு, ஒன்பது, பதினோராம் நாட்களில் கூடினால் ஆண்தான் பிறக்கும் என்று சொல்லப்பட்டுள்ளது.

**மூச்சை மாற்றும் முறை**

நாடி சுத்தி, பிராணாயாமம் பயிற்சி செய்து பழக்கமுள்ளவர்கள் தாம் விரும்பிய நேரத்தில் மூச்சை தாம் விரும்பிய மூக்கின் வழியாக ஓடச் செய்யமுடியும். இதனை எந்த யோகாசன ஆசிரியரிடம் மூலமாவது கேட்டு தெரிந்து பயிற்சி செய்யலாம்.

**விரும்பியபடி பெற**

விரும்பியபடி குழந்தை என்னும் போது ஆணோ, பெண்ணோ பெற்றுக் கொள்வது மட்டுமல்ல ஆரோக்கியமாக, அழகாக, முழுமையாக (ஊனமின்றி) பெற்றுக் கொள்வதும் ஆகும்.

ஆண், பெண்கள் உடல் உறவு கொள்ள சில வரை முறைகளை நம் முன்னோர் வகுத்திருக் கின்றனர். அதை பின்பற்றாத காரணத்தி னாலேயே உடல் உள்ள ரீதியாக குறைபாடுகளுடைய குழந்தைகள் பிறக்கின்றனர். அத்துடன் பிறக்கும் குழந்தைகளின் வாழ்வில் கஷ்டங்கள், இளமையில் நோய்கள், மரணங்கள் ஏற்படுகின்றன.

சினிமாக்கள், தொலைக்காட்சி எல்லாம் மனிதர்களின் காம இச்சைகளைத் தூண்டுவதால் கூடாத நாட்களில் கூடி குட்டிச் சுவரான குழந்தைகளைப் பெற்று குமுறியழுது வாழ்ந்து கொண்டிருக்கின்றனர்.

பறவைகளும் விலங்கினங்களும் ஒரு காலவரையறைக்குட்பட்டுத்தான் பெண்பாலுடன் கூடுகின்றன. ஏன் மனிதன் மட்டும் இதற்கு விதி விலக்கு. உணர்ச்சிகள் ஒரு கால வரைய-றைக்குத்தான் மனிதனைத் தூண்டுகின்றன. இதுதான் இயற்கை ஆனால் இன்று மனிதனே தான் நினைத்த நேரத்தில் உணர்ச்சிகளைத் தூண்டிவிடுகிறான். இது சேர்க்கை. இயற்கையான உணர்வுகளால் மனைவியைக் கூடும் போது பிறக்கும் குழந்தை வாழ்வில் உயர்ந்த நிலையை நிச்சயம் அடைவாரென்று உபநிடதங்களும் வேத சாத்திரங்களும் கூறுகின்றன.

இது பற்றி சந்தேகங்கள் இருப்பின் 'விளம்பரம்' பத்திரிகை மூலம் என்னுடன் தொடர்பு கொள்ளலாம்.


"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"

ஓம்

**ஸ்ரீநிவாஸ் நிலையம்**



சகல இந்துமத கிரியைகள்

- திருமணம்
- பூப்புனித நீராட்டுவிழா
- குடிபுகுதல்
- வியாபாரதோச பரிகாரங்கள்
- சமய சம்பந்தமான மங்கல வைபவங்கள்

சகல இந்துமதக் கிரியைகளும் ஆகம விதிமுறைப்படி செய்வதற்கு


சர்வன் ஐயர் (சிவஸ்ரீ ஸ்ரீநிவாச சர்வானந்தக் குருக்கள்)

குகன் ஐயர் (பிரம்மஸ்ரீ ஸ்ரீநிவாச குகனேஸ்வர சர்மா)

கனேடிய திருமணப் பதிவு அதிகாரி

சர்வன் ஐயர் - 416-609-0863, 416-292-0423, 416-891-6360

குகன் ஐயர் - 416-292-6089



விசேட வைபவங்களுக்கு (பிராமணாள்) சைவ உணவுகள் ஓடருக்கு செய்து கொடுக்கப்படும்

வீட்டில் பூச்சி, எலித் தொல்லையா?



வீடுகள், தொடர்மாடி வீடுகள், தொழிற்சாலைகள், வியாபார நிலையங்கள் போன்றவற்றில் பூச்சி, எலித் தொல்லையா? கவலையை விடுங்கள்.

முற்றாக ஒழிக்க அழையுங்கள்.



- No Spraying
- No Smelling
- No Moving



Call: Kanthan Tel: 416-283-9538


நான் ஒரு வழக்கறிஞர் இல்லை

உங்களுக்கு தெரியுமா?

கிறிமினல் குற்றவாளியென தீர்மானிக்கப்பட்டால் உங்கள்

- நிரந்தர வதிவிடஉரிமை
- குடியுரிமை
- குடும்ப ஒன்றிணைவு

பாதிக்கப்படும்




www.kalakalappu.net

கலகலப்பு தீசன் 416-490-9199

# Manager / salesman **எவரிடம்?**




சிலர் எந்தப் பொருட்களையும் வாங்கும் போது manager இடம் வாங்கினால் மலிவாக கிடைக்கும் என்று தப்பான ஒரு கணக்கை மனதில் வைத்துக் கொண்டுள்ளனர். அதில் எந்த உண்மையும் கிடையவே கிடையாது. ஏனெனில் manager என்பவர் சம்பளத்திற்கு அந்த கொம்பனியில் (company) வேலை செய்பவர். அவர் அந்தக் கொம்பனியிற்கு விசுவாகசமாக இருந்து அந்தக் கொம்பனியிற்கு இலாபத்தை ஏற்படுத்தக் கூடிய முறையில் செயல்படுபவராகத்தான் இருக்க முடியுமே தவிர உங்களுக்கு இலாபத்தை ஏற்படுத்தக் கூடிய ஒருவராக இருக்க முடியாது.

அதேவேளை salesmanஐ எடுத்துக் கொண்டால், அவர் அந்தக் கொம்பனியில் வேலை செய்பவராக இருந்தாலும், சம்பளத்திற்கு வேலை செய்பவர் கிடையாது. அவர் விற்பனை (sales) செய்தால் தான் அவருக்குப் பணம் கிடைக்கும். விற்பனை செய்யாவிடின் அவருக்கு எந்த ஒரு வருமானமும் கிடைப்பதில்லை. ஆகவே salesmanஐ பொறுத்தவரையில் அவர் கொம்பனியிற்கு கிடைக்கும் இலாபத்தை பற்றி சிறிதளவேனும் கவலைப்படப் போவதில்லை. அதனால் அவர் உங்களுக்கு இயலுமானவரை குறைந்த விலையில் எடுத்துத் தந்து தனக்கு ஒரு விற்பனையை ஏற்படுத்த முடிவாரே தவிர கொம்பனியைப் பற்றி கவலைப்படமாட்டார். இது எனது சொந்த அனுபவம். அடுத்த இதழில் leaseஐ பற்றி உங்களுக்கு எடுத்து வரும் வரை.

சோதிஸ் 416-704-1179


## RASANAYAGAM ANTONYPILLAI, B.Sc. Agr.

**RE/MAX** Golden Way Realty Inc.



வீடு விற்க, வாங்க, வாடகைக்கு பெற, பெற்றுக் கொடுக்க அழையுங்கள் - ராஜன் அன்ரனி

**Office: 416-299-8199**
**Home: 416-516-9897**
**Pager: 416-510-7755**

**3390 MIDLAND AVE.**
**UNIT 8, TORONTO, ON.**
**M1V 5K3**

வீடு, அறை, BASEMENT வாடகை / விற்பனை
விளம்பரங்களை ஐந்து நாட்களுக்கு முன்பாகத் தரவும்.

## Neelam silk

சுபமுகூர்த்தப் பட்டுக்கு என்றுமே இராசியான இடம்
'தமிழர் மத்தியில் தரமான பட்டுப் புடவை மாளிகை'

# நீலம் சில்க்



2003ஆம் ஆண்டின் புதுப்பட்டுத் தெரிவுகள் அனைத்தும் இப்பொழுது "நீலம் சில்க்" இல் கிடைக்கின்றன.

- SONALIKA PURE SILK
- JARDHOSHI SATIN & CREPE SILK
- JAPAN CRYSTAL SILK
- JAIPUR CRYSTAL SILK
- VASUNTHARA NETWORK CREPE

T.P: 416-778-455
Fax: 416-778-8484
1453 GERRAD STREET, EAST
(INDIAN BAZZAR)

T.P: 416-759-2002
2378 EGLINTON AVE., E.
(Kennedy Rd. & Eglinton Ave, Scar.)

## THE BEST RATE MORTGAGE

# 0% down payment

**SELF EMPLOYED - NEW IMMEGRANT - BANKRUPT**

## WITHOUT ANY CHARGE

- First & Second Mortgage
- Residential Mortgage
- Commercial Mortgage
- Line of Credit
- Construction Mortgage
- Personal Mortgage

For free information call: Matt Madani
phone: 416-895-0601 or 416-292-0303
Email Address: smadani50@hotmail.com

## ACCU-MAX-INCOME TAX & INVESTMENT SERVICES

**We guarantee to our clients**

- Accuracy
- Maximum return
- Reasonable Rate
- Fast
- Friendly
- Confidential

Income Tax - Personal and Small Business
Investment Consulting - In Real Estate
(Mortgage) Stocks and Mutual Funds

தமிழில் தொடர்புகளுக்கு - **Shiva**, (Diploma Business Accounting Canada)
(Neilson & Mclevin)
E-mail: Siaram36@hotmail.com

**Tel: 416-208-9119 Fax: 416-281-2105**


# ACTION HONDA

*"WHERE CAR OWNERSHIP IS MADE EASY"*



புதிய பழைய HONDA வாகனங்களை
ஈழத்தமிழ் மகன் சோதீஸ்
இடம் பெறும்போது

- சிறந்த சேவை
- Life time Oil change
- மற்றைய எல்லா இடங்களையும் விட கிடைக்காத குறைந்த விலைக்கு உத்தரவாதம்.




This Month Special

## RENOVATION CLEARANCE

# 416-704-1179

அலுவலக நேரம்
Mon, Fri, Sat: 9 am - 6 pm
Tues, Wed: 12 noon - 9 pm
4334 Kingston Rd, Scarborough



நகைச்சுவைத் தொடர்....

# ராசம்மா ராச்சியம்

**85**

இதுவரையில் இலை உதிர்காலம்
இளவேனில் இனி வருங்காலம்

எதிர்பார்ப்பிலும் நம்பிக்கையிலும் தான் மனித வாழ்க்கையே இருக்கிறது. உலகண்ணை என்னதான் நீங்கள் சொன்னாலும் குமுதா எவ்வளவு காலம் காதலோட போராடி கடைசியிலை இளையாம்பியை முடிச்சிட்டாள் என்று சொல்லும் போது ஆசை ஆசையாய் பார்த்துக் கொண்டிருந்த ரூபி கடைக்கண்ணால் ரூபனைப் பார்க்க ரூபி ரூபனுக்காக அல்லது ரூபன் ரூபிக்காக அலைந்த, அலைக்கழிந்த நாட்கள் ஞாபகத்திற்கு வந்தது.

காலம் கடந்த எந்த ஒரு விடயமும் விபரீதத்தையும், தேவையற்ற விளைவையும் கொடுக்கும். கிளி இலவம் பழம் பழுக்கும் என நினைப்பதும் அது பழுக்காமலே பஞ்சாய்ப் பறப்பதும் காத்திருந்து கிளி ஏமாறுவதும் சகஜம்
கடல் வற்றினால் கருவாடு வருமென நினைத்து கொக்கு வாடுவதும்
பெற்ற பிள்ளைக்காக அன்பும் ஆதரவும் காட்டி வளர்த்து பிள்ளைகள், தனி வீட்டுக்கும் முதியோர் இல்லத்திற்குப் பெற்றோரை அனுப்புவதும் எதிர்பார்ப்பு ஒன்றாகவும் விளைவுகள் வேறொன்றாகவும் இருப்பது இந்த உலகில் ஒன்றும் புதிதல்ல.

சிவராத்திரிக்கு நித்திரை விழித்து அரைகுறைத் தூக்கத்தில் படம் பார்த்துக் கொண்டிந்த ரூபி அரைகுறை ஆங்கிலமும் அரைகுறை ஜேர்மன் பாசையும் (டொச்) தடக்கும் தமிழும் பேசி ரூபன். ஐ டோன்ற் லைக் யூ; பொலிசை கோல் பண்ணட்டா எனக் கேட்டபொழுது பொலீசா! ஐ டோன்ற் கெயர் என ரூபன் சொன்ன போது ரூபனின் துணிச்சல் ரூபிக்கு பிடிந்திருந்தது. அதேவேளை இந்தியன் ஆமி யாழ் நகர் நோக்கி வந்த போது அரைக் காச்சட்டையுடன் ஆனையிறவு வரை ஓடி வந்து மீன் லொறியில் கொழும்பு வந்து கனடா சேர்ந்த கதை ரூபிக்கு ரூபன் திருமணம் செய்தபின் தான் தெரியும்

செக்கன் புளோர் செல்லம்மா சித்திரை வருடம் பிறக்கப் போகுது ஆனால் குளிர் இன்னும் விடேல்லை. இந்த வருசம் ஒன்று கூடலெல்லாம் ஊரிலைதானே. கனடா வாழ் மக்கள் ஒன்று கூடல், ஜேர்மன் வாழ் மக்கள் ஒன்று கூடல் என்று லீவிலை ஊருக்கு போற ஆக்கள். அங்கே ஒன்று கூடல் நடத்துவினம் என்ன உலகண்ணை என்று செக்கண்ட்புளோர் செல்லம்மா சொல்ல என்ன இருந்தாலும் செல்லம்மா அங்கை சனத்தின்ரை கஸ்ட்ட நஸ்ட்டம் தெரியாமல் இஞ்சை நிண்டு போய் எங்கடை சொந்தங்களையே நாங்கள் ஏமாத்துற மாதிரி இல்லையோ? தமிழ் தெரியாத மாதிரி நடிக்கிறது. இருந்த இடம் அன்றாட சூழலை மறந்தது போல நடிப்பது. எங்களையே நாங்கள் ஏமாத்தின மாதிரித் தானே?

